இணைப்பு IV

(712 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 43–பள்ளிக் கல்வித் துறை

அறிவிப்புகள் 2010–2011

1. 2010–2011 ஆம் கல்வியாண்டிற்கான ஆசிரியர் நியமனங்கள்

2010-2011 ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககத்தில் காலியாக உள்ள பின்வரும் பணியிடங்கள் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்படும்.

வ. எண்	பணியிடங்கள்	பள்ளிக் கல்வி இயக்ககம்	தொடக்கக் கல்வி இயக்ககம்
1.	முதுகலை ஆசிரியர்கள் [உடற்கல்வி இயக்குநர்கள் (நிலை—I) பணியிடங்கள் 28 உட்பட]	916	—
2.	பட்டதாரி ஆசிரியர்கள்	4,052	1,766
3.	உடற்கல்வி ஆசிரியர்கள்	348	10
4.	இடைநிலை ஆசிரியர்கள்	—	1,743
5.	சிறப்பாசிரியர்கள்	68	—
	மொத்தம்	5,384	3,519

2. புதிய மாவட்டக் கல்வி அலுவலகம் துவக்கம்

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மாவட்டக் கல்வி அலுவலகம் புதிதாகத் துவக்கப்படும்.

2010 ஏப்ரல் 16]

3. புதிய மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்கள் துவக்கம்

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூரை தலைமையிடமாகக் கொண்டு மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம் புதிதாகத் துவக்கப்படும்.

தற்போது அரியலூரில் இயங்கிவரும் பெரம்பலூர் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம், அரியலூர் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகமாக செயல்படும். பெரம்பலூர் மாவட்டத்தில் புதிய மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலகம் துவக்கப்படும்.

தொடக்கக் கல்வி இயக்ககம்

4. தமிழ்நாடு கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சிக் கட்டடத்தில் தொடக்கக் கல்வி இயக்ககத்திற்கு கூடுதலாக ரூ. 92.00 இலட்சம் செலவில் இரண்டாவது தளம் அமைக்கப்படும்.

5. ரூ. 88.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

6. 5 மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு ரூ. 30.00 இலட்சம் செலவில் 5 புதிய ஈப்புகள் வழங்கப்படும்.

அனைவருக்கும் கல்வி இயக்கம்

7. 2010-2011 ஆம் கல்வியாண்டில் 228 புதிய தொடக்கப் பள்ளிகள் துவக்கப்படும்.

8. 2010-2011 ஆம் கல்வியாண்டில் 218 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்படும்.

9. 2010-2011 ஆம் கல்வியாண்டில் புதிதாக துவக்கப்படும் தொடக்கப் பள்ளிகள் மற்றும் தரம் உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிகளுக்கு 2,412 புதிய ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 16

10. கட்டட வசதி

228 புதிய தொடக்கப் பள்ளிகளுக்கு இரண்டு வகுப்பறைக் கட்டடம் மற்றும் தரம் உயர்த்தப்பட உள்ள 218 நடுநிலைப் பள்ளிகளுக்கு, மூன்று வகுப்பறைக் கட்டட வசதிகள் செய்து தரப்படும். மேலும் 4,710 பெண்கள் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படும். நீலகிரி, மதுரை, கோயம்புத்தூர், கன்னியாகுமரி மற்றும் சென்னை மாவட்டங்களில் நகர்ப்புறம் மற்றும் வனப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி அப்பள்ளிகளுக்கு 39,000 மீட்டர் சுற்றுச் சுவர் ஏற்படுத்தப்படும். 3,273 பள்ளிகளுக்குத் தலைமையாசிரியர் அறை அமைத்துத் தரப்படும். மேற்கண்ட கட்டட வசதிகள் ஏற்படுத்த ரூ. 165.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

11. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் படிக்கும் திறனை மேம்படுத்துவதற்காக முதன் முறையாக 22,642 தொடக்கப் பள்ளிகள் மற்றும் 8,290 நடுநிலைப் பள்ளிகளில் ரூ. 17.56 கோடி செலவில் நூலக வசதி ஏற்படுத்தப்படும்.

12. 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவிகள் வசதியாக அமர்ந்து பயிலுவதற்காக ரூபாய் 34.00 கோடி செலவில் பள்ளிகளுக்கு பெஞ்ச் மற்றும் டெஸ்க் வழங்கப்படும். இதன் மூலம் 4.5 இலட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்.

13. 1.30 இலட்சம் மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்கு ரூ. 39.00 கோடி செலவில் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு குழந்தைகளுக்கான உபகரணங்கள் வழங்கப்படும்.

14. புத்தகப் பூங்கொத்துத் திட்டத்தினால் அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு முதற்கட்டமாக 257 தமிழ்ப் புத்தகங்கள் மற்றும் 77 ஆங்கில சிறுகதைப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இதன் அடிப்படையில் மூன்றாம் வகுப்பு மாணவர்களின் வாசிக்கும் திறன் உயர்ந்துள்ளதை தேசிய கல்வி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு முடிவுகள் உறுதி செய்துள்ளது. அதனைத் தொடர்ந்து தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தமிழ் மற்றும் ஆங்கில மொழித் திறனை வளர்க்கும் வகையில் 2010-2011 கல்வியாண்டில் 75 தமிழ் வழி மற்றும் 75

2010 ஏப்ரல் 16]

ஆங்கில வழி சிறுகதைப் புத்தகங்கள் (Supplementary Readers) ஆசிரியர்களால் உருவாக்கப்பட்டு அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கு வழங்கப்படும். இதன்மூலம் 44 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவார்கள்.

15. பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற 54 கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிகளில் 17 மையங்கள், 100 மாணவிகள் பயிலக்கூடிய வகையில் இக்கல்வியாண்டில் தரம் உயர்த்தப்படுகிறது. இதன்மூலம் 850 மாணவிகள் கூடுதலாக பயன்பெறுவர்.

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

16. புதிய உயர்நிலைப் பள்ளிகள் (New Schools)

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் புதியதாக 200 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றுக்கும் வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, அலுவலக அறை, அறிவியல் ஆய்வகம், கணினி ஆய்வகம், நூலகம் மற்றும் ஆய்வக உபகரணங்கள், குடிநீர்/ கழிப்பிட வசதிகளுக்காக தலா ரூ. 58.12 இலட்சம் வீதம் மொத்தம் ரூ. 116.24 கோடி செலவிடப்படும்.

17. மாதிரிப் பள்ளிகள் (Model Schools)

மாநிலத்தில் 13 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் தரமான கல்வியை வழங்கும்நோக்கில் ஒரு ஒன்றியத்திற்கு ஒரு மாதிரிப் பள்ளி வீதம் 44 மாதிரிப் பள்ளிகள் (6 முதல் 12 வகுப்புகள் கொண்ட மேல்நிலைப் பள்ளிகள்) அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக தர்மபுரி, கரூர், நாமக்கல், சிவகங்கை, திருப்பூர், கடலூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் மொத்தம் 18 ஒன்றியங்களில் 18 மாதிரிப் பள்ளிகள் துவக்கப்படும். இப்பள்ளிகள் பொருட்டு ரூ. 54.00 கோடி மதிப்பீட்டில் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு 2010-2011 ஆம் கல்வியாண்டு முதல் இப்பள்ளிகள் செயல்படும். இப்பள்ளிகளுக்கு தொடர் செலவினம் ஆண்டுக்கு ரூ. 75.00 இலட்சம் அனுமதிக்கப்படும். எஞ்சியுள்ள 26 ஒன்றியங்களில் அடுத்த கட்டமாக மாதிரிப் பள்ளிகள் ஏற்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

[2010 ஏப்ரல் 16

பள்ளிக் கல்வி இயக்ககம்

18. மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களுக்கான திட்டத்திற்கு புதிய துணை இயக்குநர் பணியிடம் உருவாக்குதல்

மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான கல்வித் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்த உதவிடும் வகையில் முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் துணை இயக்குநர் பணியிடம் ஒன்று பள்ளிக் கல்வி இயக்ககத்தில் புதிதாக உருவாக்கப்படும்.

19. 9 முதல் 12 வகுப்பு வரை படிக்கும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு அரசால் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்

1,069 மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள், சீருடைகள் மற்றும் உதவி உபகரணங்கள் ரூ. 13.76 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்கப்படுத்தும் நோக்கில் ஆண்டொன்றுக்கு உதவித் தொகையாக தலா ரூ. 2,000/- வீதம் 388 மாற்றுத்திறன் கொண்ட மாணவிகளுக்கு மொத்தம் ரூ. 7.76 இலட்சம் வழங்கப்படும்.

கல்வி மாவட்டத்திற்கு ஒரு வள மையம் (Resource Centre) வீதம் மாற்றுத் திறன் கொண்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களுடன் கூடிய 64 வள மையங்கள் ரூ. 1.72 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கு வசதியாக 50 பள்ளிகளில் ரூ. 15.00 இலட்சம் மதிப்பீட்டில் சாய்தள நடைபாதை (Ramp) அமைக்கப்படவுள்ளன.

100 பள்ளிகளில் ரூ. 10.00 இலட்சம் மதிப்பில் மாற்றியமைக்கப்பட்ட கழிவறைகள் (Modified Toilets) ஏற்படுத்தப்படும்.

20. நபார்டு வங்கி உதவியுடன் அரசுப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் செய்தல்

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டில் ரூ. 229.01 கோடி செலவில் 259 அரசு உயர்நிலை/மேல்நிலைப்

2010 ஏப்ரல் 16]

பள்ளிகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகளான வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், ஆய்வக உபகரணங்கள், தளவாடச் சாமான்கள், குடிநீர் வசதிகள், கழிவறை வசதிகள் போன்ற வசதிகள் செய்துதரப்படும்.

21. கருணை அடிப்படையில் நியமனம் வழங்குதல்

பணியிலிருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அரசுப் பணியில் நியமனம் வழங்கும் திட்டத்தின்கீழ் 2010-2011 ஆம் ஆண்டில் 250 தகுதிவாய்ந்த நபர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாகவும், தட்டச்சர் பதவிக்கு தகுதி பெற்றுள்ள 27 நபர்களுக்கு தட்டச்சர்களாகவும் நியமனம் வழங்கப்படும்.

22. மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் வழங்குதல்

பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடம் இல்லாத திருவாரூர், உத்தமபாளையம், பெரம்பலூர், உடையார்பாளையம், கும்பகோணம், கூடலூர், முசிறி, ஒசூர் மற்றும் மத்திய சென்னை ஆகிய 9 மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் வழங்கப்படும்.

23. பள்ளிச் சீரமைப்பு மாநாடு

பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் பள்ளிகளில் அடிப்படைத் தேவைகளான வகுப்பறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, மின்வசதி, கற்பித்தல் கருவிகள், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டுத் திடல்கள் இன்னும் பிற வசதிகள் கிடைக்க வழிவகுக்கின்றன.

பொதுமக்கள் தாமாக முன்வந்து அளிக்கும் நன்கொடைகள், பெறப்பட்டு, மேற்கண்ட தேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் அனைவரும் முழு மனதுடன் ஈடுபட்டு, இத்திட்டத்தை நிறைவேற்றும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர். 2010-2011 இல் தேனி, புதுக்கோட்டை, நாகப்பட்டினம், திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய 5 மாவட்டங்களில் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தி பள்ளிகளில் சமுதாயப் பங்கேற்பினை மேம்படுத்த வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

[2010 ஏப்ரல் 16

24. **அலுவலகங்களுக்கான புதிய கட்டடங்கள் கட்டுதல்**

திருவள்ளூர் மாவட்டத்தில் புதிய முதன்மைக் கல்வி அலுவலக வளாகம் ரூ. 1.50 கோடி மதிப்பில் அமைக்க உத்தேசிக்கப்பட்டு முதற்கட்டமாக ரூ. 78.00 இலட்சம் ஏற்கெனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2010-2011 ஆம் ஆண்டில் ரூ. 72.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

25. **அரசு நிதி உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் அல்லாத காலிப் பணியிடங்கள் நிரப்புதல்**

அரசு நிதி உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள 952 ஆசிரியர்கள் அல்லாத பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26. **தொன்மைப் பாதுகாப்பு மன்றம்**

தமிழ்நாட்டின் வரலாறு, கலை, பண்பாடு, தொல்லியல் போன்றவற்றை பள்ளி மாணவர்கள் தெரிந்து கொள்ள ஏதுவாகவும், இவை குறித்த நினைவுச் சின்னங்கள், தொன்மையான கல்வெட்டுகள் மற்றும் புராதன இடங்கள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும் பொருட்டும் வரும் கல்வியாண்டு முதல் ஒவ்வொரு அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளியிலும் ஒரு தொன்மைப் பாதுகாப்பு மன்றம் (Heritage Club) துவக்கப்படும்.

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம்

27. 2010-2011 ஆம் ஆண்டில் ரூ. 5.36 கோடி செலவில் ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி அளிக்கப்படும்.

28. திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சமூகரெங்கபுரம் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்திற்கு ரூ. 60.00 இலட்சத்தில் புதிய கட்டிடம் கட்டப்படும்.

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்ககம்

29. மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் அலுவலகம் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகங்களில் தலா ஒரு பணியிடம் வீதம் 16 பள்ளித் துணை ஆய்வாளர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும்.

EGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2010 ஏப்ரல் 16]

பொது நூலக இயக்ககம்

30. புதியதாக அமைக்கப்பெற்ற திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் மாவட்ட மைய நூலகம் மற்றும் மாவட்ட நூலக அலுவலர் அலுவலகம் தோற்றுவிக்கப்படும்.

31. 10 ஆம் வகுப்பில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களில் தேர்ச்சி பெறும் நூலகப் பணியாளர்களின் குழந்தைகளுக்கு மடிக்கணினி வழங்கப்படும்.

32. நல் நூலகர் விருது பெறும் நூலகர்களுக்கு இவ்வாண்டு முதல் ரூ. 2,000/- பணமுடிப்பு வழங்கப்படும்.

33. "சிறைச்சாலைகளில் சிறகுகள்" என்கின்ற திட்டத்தின்கீழ் புழல் மற்றும் மாவட்ட சிறைச்சாலைகளில் நூலகங்கள் ஆரம்பிக்கப்படும்.

34. நடப்பாண்டில் ரூ. 7.00 கோடிக்கு, பொது நூலக இயக்ககத்தின் கீழ் வாடகைக் கட்டடங்களில் செயல்படும் நூலகங்களுக்கு சொந்த நூலகக் கட்டடங்கள் கட்டித்தரப்படும்.

அரசுத் தேர்வுகள் இயக்ககம்

35. அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு மதிப்பெண் அட்டவணைகளைச் சரிபார்க்கவும், அசல் மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையறியவும் ஏதுவாக ரூ. 20.00 இலட்சம் செலவில் ஆவணங்கள் டிஜிட்டல் முறையில் பராமரிப்பு (Digitalisation) செய்யப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS